**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.415/2023</u>**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18–ம் நாள் வியாழக்கிழமை வா.சா.**1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏசைய்யன் | தொழில் | |
| த/பெ | பழனி | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| | | மாவட்டம் | |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1.** இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்பப்படாததற்கான காரணத்தை வழக்குரையில் குறிப்பிட்டேனா என்றால் அறிவிப்பு அனுப்புவதற்கு அவகாசம் இல்லை. வழக்கு சொத்தில் 1–ம் பிரதிவாதி குடியிருப்பதால் தான் நான் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி என்னுடைய அக்கா என்றால் சரிதான். இரண்டு மூன்று பிரதிவாதிகள் என்னுடைய அக்கா மகன்கள் என்றால் சரிதான். என்னுடைய அக்காவின் மகளின் பெயர் லீலாவதி அவரை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததற்கு காரணம் எதையும் நான் வழக்குறையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அவருக்கு இந்த வழக்கில் சம்பந்தம் எதுவும் இல்லை. தாவா சொத்து நத்தம் நிலவரி திட்ட பட்டா எண் 145ன் படி என்னுடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

**2.** என்னுடைய தகப்பனார் 2000–ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறப்புவதற்கு முன்பு தவா சொத்தை பொறுத்து ஆவணம் எழுதி

வைக்கவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் வாய்மொழியாக என்னுடைய சகோதரியை கூட்டி வைத்து மேற்படி சொத்தை எனக்கு பாத்தியப்படுத்துவதாக சொன்னார். என்னுடைய உடன் பிறந்த ஒரு ஒரு சகோதரியின் பெயர் சரசு மற்றொரு சகோதரியின் பெயர் எஸ்தர் ஆவர் என்னுடைய தந்தைக்கு நான், 1வது பிரதிவாதி மற்றும் 2 சகோதரிகள் வாரிசுகசள் என்றால் சரிதான். என்னுடைய தந்தை யார் முன்னிலையில் வைத்து தாவா சொத்தை எனக்கு வாய்மொழியாக பாத்தியப்படுத்தினார் என்று விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்னுடைய தந்தை வாய்மொழியாக மேற்படி சொத்தை எனக்கு பாத்தியப்படுத்தியதாக நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். நான் ஈரோட்டில் குடி இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல படியூரில் குடியிருக்கிறேன் தொழில் நிமித்தமாக ஈரோட்டில் இருக்கிறேன். வழக்கு சொத்தில் எனக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அவை அனைத்தும் ஈரோடு முகவரியில் உள்ளது. வழக்கு சொத்தில் நான் குடியில்லாததால் தான் மேற்படி முகவரியில் என்னுடைய தனிப்பட்ட அடையாள அட்டைகள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய தந்தை இறந்த பிறகு நானும் எனது சகோதரிகளும் கலந்து பேசி அதன் பிறகு தான் தாவா சொத்தில் உள்ள பழைய வீடு இடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதற்கு முன்பு 1-ம் பிரதிவாதி தான் தன்னுடைய பெற்றோர்களுடன் மேற்படி வீட்டில் இருந்தார் என்றாலும் நான் அதில் குடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு கட்டப்பட்ட வீடும் நான் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் இணைந்து முதலீடு செய்து கட்டப்பட்ட வீடு என்று சொன்னால் சரியல்ல. முழுக்க முழுக்க என்னால் கட்டப்பட்டது. வா.சா.ஆ.9-ல் தேதி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று

சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் புல எண். 386/2 ல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் வா.சாஆ.9–ல் காசா எண் 386/2B என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் B என்பது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. தாவாவில் நத்தம் புலஎண். 477/1 B எனக் குறிப்பிடப்பட்டுள்ளது நத்தம் புல எண் 477/18 என உள்ளது 18 என்பது தான் சரி. 18 என்பது வழக்குரையில் 1 B என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.9–ல் அதை வழங்கிய சிவில் இன்ஜினியரின் பதிவு குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.9 என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் அதற்கும் தாவா சொத்துக்கும் தொடர்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ.9 ல் மொத்தம் எவ்வளவு சதுர அடி கட்டிடம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் எவ்வளவு சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு நினைவில்லை 4 சென்ட் நிலத்தில் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. 1–ம் பிரதிவாதிதான் மேற்படி வீட்டைக் கட்டியுள்ளார் என்பதால்தான் மேற்படி கட்டடத்தின் சதுர அடியை கூட என்னால் சொல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டின் கிழபுறம் தென்வடல் 12 மீட்டர் அளவு கொண்டது மேல்புறம் 10 மீட்டர் அளவு கொண்டது தென்புறம் கிழமேலாக 15 மீட்டர் அளவு கொண்டது வடபுறம் 17 மீட்டர் அளவு கொண்டது. நான் கூறுகின்ற அனைத்து விவரங்களும் பொய்யான சங்கதிகள் என்றாலும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே தான் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் மேற்படி அளவுகளை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

5. நாங்கள் நால்வரும் கலந்து பேசி மூன்று பெண் மக்களின் அனுமதியுடன் தான் என்னுடைய பெயரில் மேற்படி வீட்டுக்கு வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 23.01.2019 25.03.2019, மற்றும் 08.03.2013 ஆகிய தேதியிட்ட வீட்டு வரி ரசீதில் பணம் செலுத்துபவர்

பெயர் லட்சுமி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 10.02.2014 ம் தேதியிட்ட வரி 3–ம்பிரதிவாதி பெயரில் செலுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரி ரசீதுகள் பிரதிவாதி குடியிருப்பதால் என்னுடைய அனுமதியின் பெயரில் என்னுடைய பெயரில் வரி செலுத்தியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ரசீதுகள் நாங்கள் சமாதானமாக இருந்த போது அவர்களால் செலுத்தப்பட்டது. மேற்படி வரிக்கான தொகையை நான் அவர்களிடம் செலுத்தினேன் வரியை பிரதிவாதிகள் கட்டினார்கள். மேற்படி சங்கதியை நான் வழக்குரையின் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றாலும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. நான் நல்லூர் பகுதியில் எமரால்டு ஃபேஷன் என்ற பெயரில் பனியன் கம்பெனி வைத்திருந்தேன். எனக்கும் இரண்டாம் பிரதிவாதிக்கும் பணி ரீதியாக கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒரு பிரச்சனை ஏற்பட்டு காங்கேயம் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை கொடுத்தார் என்றால் சரிதான் ஆனால் அது பொய் புகார் ஆகும். 1–ம்பிரதிவாதி முதலமைச்சர் தனிப்பிரிவில் எனக்கு எதிராக ஒரு புகார் அனுப்பி அதுவும் காங்கேயம் காவல் நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விசாரணையின் போது நான் என்னுடைய சகோதரிகளுக்கு சொத்தை சமமாக பிரித்துக் கொடுப்பதாக உத்திரவாதம் அளித்ததன் பேரில்தான் மேற்படி விசாரணை முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு நான் என்னுடைய அடியாட்களின் உதவியோடு தாவா சொத்தில் உள்ள வீட்டில் குடியிருந்த பிரதிவாதிகளை வீட்டை விட்டு துரத்தி இரண்டாம் பிரதிவாதியை அடித்தது தொடர்பாக காங்கேயம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் குற்ற எண் 166/2023 என்ற வழக்கு என் மீது பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது பொய்யான புகாராகும். மேற்படி வழக்கில் நான் முதல் எதிரி என்னுடன் 7 நபர்கள் எதிரியாக இருந்தார்கள்.

7\. வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதியை தாக்கி செயல்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது முறைப்படி தாவா சொத்தை பிரிவினை செய்த பிறகு வழக்கு சொத்துக்குள் செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தியதன் பெயரில் மேற்படி வழக்கு சொத்தில் உள்ள வீடு தற்போது பூட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல நான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்றாலும் குடியிருப்பதாக வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக அனுபவத்தில் இருக்கும் வழக்கு சொத்தில் தனி அனுபவம் கோரி வழக்கு தாக்கல் செய்ய எனக்கு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் குடியில்லாமல் பிரதிவாதிகள் வழக்க சொத்தில் பிரச்சனை செய்வதாக வழக்க தாக்கல் செய்திருப்பது ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என்னுடைய தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் அவர் இறந்ததற்கு பிறகு அவர்களது வாரிசுகள் நால்வருக்கும் மேற்படி சொத்தில் சரி பங்கு பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் குற்ற வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக முகாந்திரம் இல்லாமல் இந்த உரிமையியல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது இல்லை என்றாலும் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.18 18:40:20 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.